2019 ஜுலை 20] [திருமதி சி. வளர்மதி]

வடிவாய் வாழ்ந்த தாயின் வழியில், மாற்றாரும் போற்றுகின்ற மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அண்ணன் அவர்கள் பேரவை விதி 110—ன்கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறைக்கு முத்தான 5 திட்டங்களை அறிவித்துள்ளார்கள். மாண்புமிகு முதல்வர் அண்ணன் அவர்களுக்கு துறையின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

4. தகவல் கோரல்

(அ) பொதுப் பணித் துறையில் NMR பணியாளர்களை பணி நிரந்தரம் செய்தல்

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டத் தொடரின் கடைசி நாளான இன்று, நான் கேள்வி கேட்கவில்லையென்றால், நன்றாக இருக்காது, இல்லையா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் நிறைய அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். ஆனால், நான் அவற்றில் எதிர்பார்த்தது என்னவென்றால், அவர்களுடைய துறையில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக இருக்கிற NMR—கள், பாவம், அவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் பணி நிரந்தரம் செய்யப்படும் என்ற முத்தான ஓர் அறிவிப்பை அறிவித்திருந்தால், நாங்களும் அந்தச் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியடைந்திருப்போம். மாண்புமிகு அமைச்சர்களைப்போல் நானும் பாராட்டியிருப்பேன். இப்பொழுது ஒன்றும் கெட்டுப்போய் விடவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுந்து வேகமாக 'அறிவிக்கப்படும்' என்று அறிவித்தால், மறுபடியும் மகிழ்ச்சியடைவேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பதிலுரையிலேயே*

நான் தெரிவித்துவிட்டேன். மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதனைக் கவனிக்கவில்லை என்று கருதுகிறேன். என்னுடைய பதிலுரையிலேயே, 23 ஆண்டு காலம் பணியாற்றிய NMR, 12 ஆண்டு காலம் பணியாற்றிய NMR–களையெல்லாம் பணி நிரந்தரம் செய்வதற்காக கோப்புகள் அரசிடம் வரப்பெற்றிருக்கின்றன என்றும், அவர்களுக்கெல்லாம் பணி நிரந்தரம் செய்யப்படும் என்பதையும் பொதுப் பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தின்போது அளிக்கப்பட்ட என்னுடைய பதிலுரையில் நேற்றே நான் அறிவித்துவிட்டேன். (மேசையைத் தட்டும் ஒலி)

திரு. துரைமுருகன்: *நான் பதிலுரையைக் கவனித்தேன். இருந்தாலும், இன்றைக்கு கடைசி நாளில் மறுபடியும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வாயால் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10—30

(ஆ) அணைகள் பாதுகாப்பு மசோதாவை மத்திய அரசு மீண்டும் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைகள் பாதுகாப்பு சம்பந்தமாக ஒரு பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன். மாநிலங்களில் இருக்கக்கூடிய அணைகளின் பாதுகாப்பையும் மத்திய அரசு எடுத்துக்கொள்ளக்கூடிய வகையில் அமைச்சரவைக் கூட்டத்தில் அவர்கள் இதை நிறைவேற்றியிருக்கிறார்கள். அணைகள் பாதுகாப்பு மசோதா மீண்டும் கொண்டுவருவது என்பது கூட்டாட்சித் தத்துவத்திற்கே மிகப் பெரிய நெருக்கடியைக் கொடுத்திருக்கிறது என்பதுதான் உண்மை. காவேரி இறுதித் தீர்ப்பைச் செயல்படுத்தாத கர்நாடக அரசின் அணையை அவர்களுடைய கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ள மறுக்கக்கூடிய மத்திய அரசு, இப்போது அனைத்து மாநிலங்களில் இருக்கக்கூடிய அணைகளின் கட்டுப்பாடுகளைப் பாதுகாப்பு என்ற பெயரிலே கைப்பற்றுவதற்கு முயற்சி செய்திருப்பது என்பது வேதனை தரக்கூடிய செய்தியாக அமைந்திருக்கிறது. முல்லைப் பெரியாறு,*